கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறை விதிகளுக்குட்பட்டு கால்நடைகளின் எண்ணிக்கை இருக்குமானால், நிச்சயமாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் மற்றும் திரு. ரா. சரத்குமார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

சரிகை ஆலையை சீரமைத்தல்

***5703—திரு. வி. சோமசுந்தரம்:**
திரு. ரா. சரத்குமார்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை ஆலையைச் சீரமைத்து, உற்பத்தியைப் பெருக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரத்தில் இயங்கும் சரிகை ஆலையைச் சீரமைத்து உற்பத்தியைப் பெருக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மாவினுடைய அரசால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சரிகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன், மூலப்பொருட்களை ஒப்பந்தப்புள்ளிமூலம் கொள்முதல் செய்யும் கால அளவான 45 நாட்களுக்கு ஒரு முறை என்ற நடைமுறையை மாற்றி, 15 நாட்களுக்கு ஒரு முறை ஒப்பந்தப்புள்ளி கோரும் நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் தடையின்றிக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் விற்பனை யாவும் ஆலை வாயில் விலை திட்டத்தின்படி (Mill Gate Price Scheme) *தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதால், பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் இந்தத் திட்டத்தின்மூலம் 2.5 விழுக்காடு விலையில்*

2013 அக்டோபர் 28]

மானியம் பெற்று வருகின்றன. காஞ்சிபுரம் சரிகை ஆலை உற்பத்திப் பிரிவில் முழுமையான சரிகை உற்பத்தியை எய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா முற்றிலும் புறக்கணிக்க வேண்டுமென்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றிய (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய இரும்புப் பெண்மணியாகத் திகழும், நாளைய பாரதத் திருநாட்டை வழி நடத்தப்போகும் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரத்தில் இருக்கின்ற சரிகை ஆலையில் சரிகை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதற்கும், சரிகை உற்பத்தியினை முழுமையாக எய்துவதற்கும் தேவையான நடவடிக்கையை எடுத்த, எங்களது தாய், நெசவாளர்களின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த ஆலை மிகவும் பழமையான ஆலையாக இருப்பதினால், ஒரு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து இந்த ஆலை புனரமைக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற இலட்சியத்தோடு செயல்படுகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, மக்களைத் தேடி, மக்களின் தேவைகளை அறிந்து, மக்களுக்காகத் திட்டம் தீட்டி

செயல்படுகின்ற அரசாக விளங்குகிறது. குடியிருக்க வீடு இல்லை என்கிற நிலையை அறிந்து நெசவாளர்கள் குடியிருக்கவும், குடியிருக்கும் வீடுகளில் நெசவுப் பட்டறை அமைக்கவும், 260 கோடி ரூபாயில் 10 ஆயிரம் விலையில்லா பசுமை வீடுகள் வழங்கியும், கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியைப் பெருக்கிடவும், உற்பத்தியின்மூலம் அதிகக் கூலி கிடைக்கவும், 6,000 பெடல் தறிகள் ரூபாய் 24 கோடி விலையில் வழங்கியும், கைத்தறித் துறைக்கு சிட்டா நூல்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க, 25 ஆயிரம் மின் மோட்டார்கள் வழங்கியும், பட்டு உற்பத்தியை அதிகரிக்க Pneumatic Air Compressor உபகரணங்கள் வழங்கியும், நெசவாளர்களின் பொற்காலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செயல்படுகிறது. காஞ்சிபுரத்தில் பழமையான ஆலை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றையதினம் பட்டுச் சேலையின் அழகினை மெருகூட்டுவதற்கு பார்டரில் சரிகை, புட்டாவில் சரிகை, முந்தியில் சரிகை, முகூர்த்தப் பட்டில் முழுவதுமாக சரிகை போன்று சரிகையினுடைய தேவையை அதிகப்படுத்துவதற்கு, நியாயமான முறையில், மக்களுக்கும், கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வந்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நெசவாள மக்களுக்காக பல்வேறு திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், நெசவாள மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.